விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 211 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 02 திங்கட்கிழமை (18.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## எரிபொருட்களின் விலை குறைப்பு



(கொழும்பு)

**நேற்று இரவு 10 மணிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறைத்துள்ளது.**

இதன்படி ஒக்ரேன் 92 ரக பெற்றோல் 20 ரூபாயினால் குறைக்கப்பட்டு 450 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டு, 540 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேவேளை டீசல் 20 ரூபாயினால் குறைக்கப்பட்டு 440 ரூபாயிற்கும், சுப்பர் டீசல் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டு 510 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்படவுள்ளன. (4-7)

## தனியார் பேருந்துகள் வழமைக்குத் திரும்பின

(கொழும்பு)

தனியார் பஸ்கள் இன்று முதல் வழமை போல் சேவையில் ஈடுபடவுள்ளன.

வரையறையற்ற வகையில் தனியார் பஸ்களுக்கு எரிபொருளை விநியோகிக்க தீர்மானித்துள்ளமை சிறந்ததாகும் என அகில இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

11

### நிதிப் பற்றாக்குறையால்
## எரிபொருள் கொள்வனவை குறைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

மாதாந்தம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தேவையான 600 மில்லியன் டொலர்களை இலங்கை இனிப் பெற முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பை இலங்கைமத்திய வங்கி

11

## நள்ளிரவு வீடு புகுந்து 20 பவுண் நகை திருட்டு
### பண்டத்தரிப்பில் சம்பவம்

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 20 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

11

### இலங்கையில் பதற்றமான சூழ்நிலை
## சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டுகிறது இந்தியா!

(டில்லி)



**இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையில் இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் ஆராய இந்திய அரசாங்கம் அந்த நாட்டில் சர்வகட்சிக் கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளது.**

நாளை செவ்வாய்க் கிழமை இலங்கை நெருக்கடி தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அரசாங்கம்அழைப்பு விடுத்துள்ளது என பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரஹ்லாட் ஜோசி தெரிவித்துள்ளார்.

11

## இலங்கைக்கு சீனா உதவ வேண்டும்
### அமெரிக்கா வலியுறுத்து

(வொஷிங்டன்)

இலங்கைக்கு மிகப் பெரிய கடன் வழங்குநராக இருக்கும் சீனா, இலங்கைக்கான கடனை மறுசீரமைக்க உதவ வேண்டும் என்று அமரிக்கா தெரிவித்துள்ளது.

11

## ரணிலை பதவி விலகக் கோரி இன்று பாரிய போராட்டம்

(கொழும்பு)

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக வற்புறுத்தி இன்று தீவிர நடவடிக்கை எடுப்போம் என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே நேற்று தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவ

11

### கோட்டாவை கைதுசெய்யக் கோரி
## புலம்பெயர் தேசங்களில் தொடர் போராட்டங்கள்
### நாடு கடந்த தமிழீழ அரசு

(கொழும்பு)

"தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரச இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்து" என்ற தொடர் போராட்டங்கள் புலம்பெயர் தேசங்கள் எங்கும்.

11

## இலங்கைக்கு 14 மில். டொலர் வழங்கியது ஜி-7 நாடுகள்

(கொழும்பு)

ஜி-7 நாடுகளின் ஒன்றியம் இலங்கைக்கு 14 மில்லியன் டொலர் உதவி வழங்கியிருப்பதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமகாலத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் இணைய வழி ஊடாக கலந்து

11

### அடுத்த மாதம்
## இலங்கை வருகிறார் கோட்டா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய

11

## நாட்டில் வேகமெடுக்கும் கொரோனாத் தொற்று

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த நாட்களில் நாளாந்தம் சுமார் 10 நோயாளர்கள் பதிவாகிய நிலையில், தற்போது நாளாந்தம் 25 கொரோனா நோயாளர்கள் பதிவாகுவதாக அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனராகலையில் கோர விபத்து தம்பதியர் பரிதாபப் பலி

(மொனராலை)

மொனராகலை பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஆண் ஒருவரும் அவரது கர்ப்பவதி மனைவியும் உயிரிழந்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாய வீதியில் புத்தல குடா ஓயா பிரதேசத்திற்கு அருகில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

077 745 1625


## மணிவிழா வாழ்த்து



17.07.2022இல் தனது 60 வயது பூர்த்தியில் மணிவிழாக் கண்ட எம் சக ஆசிரியை

**செல்வி சாந்தலட்சுமி பெருமாள்பிள்ளை**

அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**சேவை விபரம்**

1. யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம் (2000/01/02 - 2001/06/13)
2. யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (2001/06/14 - 2003/07/01)
3. யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம் (2003/07/02 - 2010/05/09)
4. யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் (2010/05/10 - 2011/01/04)
5. யா/கட்டைக்காடு அ.த.க. பாடசாலை (2011/01/05 - 2013/01/01)
6. யா/கோப்பாய் நா்வலர் தமிழ் வித்தியாலயம் (2013/01/02 - இன்றுவரை)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.** (C-4621)

## கண்ணீர் அஞ்சலி



மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **அஜந்தா சிவப்பிரபாகரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **சவிரியான் அல்பிரட் மரியசிலுவை கூஞ்ஞ**

பிறப்பு 1938.06.25 இறப்பு 2022.07.16

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வட மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் சங்கம்** (12174)

## கண்ணீர் அஞ்சலி



எமது பல்கலைக்கழக நண்பி

அமரர் செல்வி

**கலைமதி செல்லத்துரை**

(**கணக்காளர்** - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம், **முன்னாள் கணக்காளர்** - மன்னார் மற்றும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம், **முன்னாள் போதனாசிரியர்** - அஞ்சல் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணம்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 20.07.1974 உதிர்வு 15.07.2022

**பிரிவால் துயருறும்**
**யாழ். பல்கலைக்கழக நண்பர்கள் (95/96)** (C-4617)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசநாயகம் சிவசோதி



சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி இராசநாயகம் சிவசோதி நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செல்வவிநாயகம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசநாயகத்தின் அன்பு மனைவியும் இரஜீன்குமார் (ஜேர்மனி), சிவலதா (ஆசிரியர் - மட்டக்களப்பு இந்துக் கல்லூரி), பிறேமலதா (ஜேர்மனி), ஷாம்குமார் (ஆசிரியர் - யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை), செல்வக்குமரன் (நூலகர் - நகர சபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவயோகனின் (ஓய்வுநிலை தபாலதிபர்) அன்புச் சகோதரியும் மீனா (ஜேர்மனி), குணலிங்கம் (ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்), சிவநேசராஜா (ஜேர்மனி), கல்யாணி (ஆசிரியர் - யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை), குகதர்சினி (ஆசிரியர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அருண், அஸ்வினி, சிறாணி, சேரன், பிரணவன், துஷாந், திலக்ஷாயினி, கிரிஷாந், பிரேம்நாந், சாய்லதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.07.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**

(C-4619)

**தகவல்: குடும்பத்தினர்**
**076 544 7221**

## இணுவில் இந்துவின் கண்ணீர்க் காணிக்கைகள்



14.05.2022 அன்று இறைபதம் அடைந்த

திருமதி **கந்தகுமார்** ஆசிரியரின் அன்புத் தாயார்

அமரர் **கந்தையா வள்ளியம்மை**

அவர்களையும்

17.06.2022 அன்று இறைபதம் அடைந்த

திருமதி **சிவகுகன்** ஆசிரியரின் அன்புத் தாயார்

அமரர் **சோமசுந்தரம் இராஜேஸ்வரி**

அவர்களையும்

19.06.2022 அன்று இறைபதம் அடைந்த

திரு. **ஐங்கரன்** ஆசிரியரின் அன்பு மனைவி

அமரர் **சாந்தமலர்** அவர்களையும்

இந்நாளில் நினைவுகூருவதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**இணுவில் இந்துக் கல்லூரி**

(C-4619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் தேர்தலில் வென்றால் மீண்டும் போராட்டம் வெடிக்கும்

## தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டால் நாட்டில் மீண்டும் பாரிய போராட்டங்கள் வெடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

ரணில் விக்கிரமசிங்க பதவியை விட்டு விலக வேண்டும் என்று மக்கள் தற்போது போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தற்போது கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க அந்த பதவியை பெற்றுக்கொள்ள முனைவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ரணில் பதவி விலக வேண்டும். 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெற்றால் 21 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

மக்களின் குரலுக்கு செவி சாய்த்து பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும். ரணிலை மக்கள் புறக்கணித்துள்ளனர் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4)

# மொபைல் எரிபொருள் விநியோகம் விரைவில் அறிமுகம்- காஞ்சன



(கொழும்பு)

முச்சக்கர வண்டிகள் மற்றும் ஜெனரேட்டர் தேவைகளை எரிபொருள் நிரப்புவதற்கான முன்னோடி திட்டமாக மொபைல் எரிபொருள் விநியோகிகள் பயன்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிலையங்களிலிருந்து பெரிய திறந்த வெளிகளில் முச்சக்கர வண்டிகள், டெலிவரி பைக்குகள் மற்றும் கேன்களுக்குப் பயன்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகின்றேன் எனவும் தெரிவித்தார். (4)

# கோட்டாவை கைது செய்யுமாறு பிரிட்டன் எம்.பிக்கள் கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை கைது செய்யுமாறு 15 பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபயவை கைது செய்து இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டுமென பிரித்தானியாவின் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் இட்டேவி உள்ளிட்ட 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

ராஜபக்ஷ இலங்கையை விட்டு தப்பிச் சென்றமை குறித்து கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கோட்டாபயவை கைது செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு கன்சர்வேட்டிவ் மற்றும் தொழிற்கட்சிகளும் ஆதரவினை வெளியிட்டுள்ளன.

கோட்டாபய ஒரு இலட்சம் தமிழர்களை கொன்றதாக சில பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் போது குற்றம் சுமத்தியுள்ளதாக சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது. (4)


# மரண அறிவித்தல்

## திருமதி.சிவகனகாம்பிகை பொன்னம்பலம்

அன்னை மடியில் :- 18.09.1944 இறைவன் அடியில் :- 16.07.2022



இளவாலை வடக்கு, சோடக்கண் வீதியை பிறப்பிடமாகவும், அலவத்தை, அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவகனகாம்பிகை பொன்னம்பலம் அவர்கள் 2022.07.16 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.அன்னார் காலஞ் சென்றவர்களான கனகசபாபதி (சின்னவர்) சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும்

உமா (லண்டன்),முரளி (லண்டன்), ஆதவன் JP ( ஆசிரியர், யா/ பன்னாலை சேர்கனகசபை அ.த.க.பாடசாலை,வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்),உஷா (கொழும்பு), கீதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரி, சிவகனகேஸ்வரன், சிவகௌரி மற்றும் சிவசாந்தராயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

சந்திரகுமார், கஜேந்தினி, சிவசாம்பவி,பிரபாகரன், ஜெயகஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், வட்டுக்கோட்டை),சபாரத்தினம் (சோமு-லண்டன்)ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாம்பவி, சரண், ஹரிஸ்மிதா,சகானந, கிருஸ்டிகன், அட்சரன், ஜஷ்வினி, ஆருஷா, அபிநிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2022.07.19 நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு
முரளி (UK) : 00447931312372
ஆதவன்:- 077 720 4405

தகவல்
பிள்ளைகள் , மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(c-4616)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனங்களுக்கு ஒரே பதிவில் பதிலடி கொடுத்த கோலி



விராட் கோலி தன் மீதான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சமூக வலைத்தளத்தில் புகைப்படம் ஒன்றை பதிவிட்டுள்ளார்.

மோசமான துடுப்பாட்டத்தினால் கடும் விமர்சனங்களை விராட் கோலி சந்தித்து வருகிறார்.

எனினும், வீரர்கள் பலரும் அவருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாம் ஆதரவு தெரிவித்தது பெரிதளவில் வைரலானது. அதேபோல் சக வீரரும் இந்திய அணியின் கப்டனுமான ரோகித் சர்மாவும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் விராட் கோலி தனது டுவிட்டர் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் பறவையின் இரண்டு சிறகுகள் உள்ளன, அதன் அருகில் கோலி அமர்ந்திருக்கிறார்.

மேலும் சிறகுகளுக்கு மேல் ஒருவேளை நான் கீழே விழுந்தால்? என்ற கேள்வி இருக்க, அதற்கு கீழே ஒருவேளை நீ மேலும் மேலும் பறக்கலாம் அல்லவா? என பதில் கொடுக்கும் வகையில் வாசகங்கள் உள்ளன.

நாம் பார்க்கும் கண்ணோட்டத்தில் தான் எல்லாம் உள்ளது என இந்த பதிவின் மூலம் அவர் தன் மீதான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார். (4)


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
- பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்) சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**


## கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

### நவிண்டில் கலைமதி அணி சம்பியன்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி போட்டியும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் குறித்த மைதானத்தில் இடம் பெற்றது.

விலகல் முறையில் அணிக்கு 07 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித்தொடரில் 48 அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இவ் இறுதிப்போட்டி நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முதற்பாதி ஆட்டம் கலைமதி அணி கட்டுப்பாட்டுடன் 1:0 என முன்நிலையில் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தவுடன் விண்மீன் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் பெற்று ஆட்டத்தைத்தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அப்போது களநிலைமையை கச்சிதமாக கணித்த கலைமதி அணியின் வீரர் களத்தின் காற்பகுதியி லிருந்து உதைத்த ஒரு பந்து மின்னல் வேகத்தில் கோலாக மாற இரு அணிகளும் இரு கோல்களைப் பெற்று சமநிலையில் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன.

தொடர்ந்து நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல் கணக்கில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று வெற்றி கிண்ணத்தையும் பணப்பரிசிலினையும் தனதாக்கிக் கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக கலைமதி அணியின் பானுவும் தொடராட்ட நாயகனாக பில்லாவும், சிறந்த கோற்காப்பாளராக விண்மீன் அணியின் கோல்காப்பாளரும் தெரிவு செய்யப்பட்டனர். (4-6)




## மரண அறிவித்தல்

# நகுலேஸ்வரன் விஜயசன் ( ரண்டா )

( யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயப் பழைய மாணவன் )



**மலர்வு : 29.07.1997 உதிர்வு : 20.06.2022**

சோளன் தோட்டம் உரும்பிராய் மேற்கு உரும்பிராய் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்து நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரன் விஜயசன் (ரண்டா) கடந்த 20.06.2022 திங்கட்கிழமை அன்று சுவிற்சர்லாந்தில் அகால மரணமானார்.

அன்னார் நகுலேஸ்வரன் - யோகராணி தம்பதிகளின் அன்பு மகனும் கபில்தேவ் (மலேசியா), சஜிபன், சபீசா, விஜயதரன், சானுயா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலங்கை கொண்டுவரப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 316 2713 (C-4620) ந.விஜயதரன் (சகோதரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை கட்டியெழுப்பும் சிந்தனை எவருக்கும் இல்லை

## –சித்தார்த்தன் எம்.பி. –

(நெளுக்குளம்)

தென்னிலங்கை அரசியல்வாதிகள் யார்? இந்த அதிகாரத்திற்கு வருவது என்ற போட்டியிடுகின்றனரே தவிர, இந்த நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியா கோவில் குளத்தில் இடம்பெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 33 ஆவது வீரமக்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நாடானது பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அடுத்த கட்டமாக என்ன நடக்குமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு துளியேனும் சிந்திக்காது தொடர்ந்தும் ஆக்கிரமிப்பிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று கூட யார் இந்த அதிகாரத்திற்கு வருவது என்று போட்டியிடுகின்றனரே தவிர, இந்த நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.(4-6-250-299)

# மரக்கறிகளின் விலை மீண்டும் எகிறியது

(கொழும்பு)

போக்குவரத்துக்கு எரிபொருள் இல்லாததால், சந்தையில் மரக்கறிகளின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக விளைச்சலை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைக்கு கொண்டு வருவதற்கான போதிய போக்குவரத்து வசதி இல்லாததால், விவசாய நிலங்களிலேயே பயிர்கள் அழியும் அபாயம் உள்ளதோடு, காய்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். (4)

# எரிபொருள் தட்டுப்பாட்டால் பல மருத்துவமனைகள் மூடல்

(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மருத்துவர் ஹரித அலுத்கே இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார் .

இதுவரையில் எந்தவொரு வேலைநிறுத்தத்திலும் கலந்து கொள்ளாத சிறுவர் மருத்துவமனையும் பணிப்புறக்கணிப்புக்கு தயாராகி வருவதாக அவர் இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார். (4)

# பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீள இயங்க வையுங்கள்

## பூநகரி பிரதேசசபை தவிசாளர்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள 6 பாடசாலைகளை திறப்பதற்கு கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பூநகரியின் பல கிராமங்கள் உவரப் பரம்பல், போர் நெருக்கடி, இடப் பெயர்வுகள் காரணமாக பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள 24 பாடசாலைகளில் 6 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

பூநகரி கல்விக் கோட்டத்திற்குள் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் பாடசாலைகளை இயக்கலாம் என்பது மக்களின் கருத்தாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெற்கு கல்வி வலயம் பூநகரி பாடசாலைகளின் அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் தனியான கோட்டக் கல்வி அலுவலகமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலை யில் மூடப்பட்டுள்ள பாடசாலை களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதேச சபையின் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (4-6-350)



கிளிநொச்சியில் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதற்கும் நாட்டை விட்டு தப்பி ஓடியதற்கும் மகிழ்ச்சி தெரிவித்து நேற்று கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலய முன்றலில் பாற்சோறு வழங்கி கொண்டாடப்பட்டது.

(படம்- யதுபாஸ்கரன்)

# எரிபொருள் நெருக்கடியால் கடல் உணவுகளின் விலை அதிகரிப்பு

(அக்கராயன்)

எரிபொருள் கிடைக்காததனால் பல மீன்பிடிப் படகுகள் கரையில் காணப்படுகின்றன. இதனால் கடல் உணவுகளின் விலை ரூபாய் 2,000 தாண்டி உள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் எரிபொருளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் ரூபாய் 2,000 க்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

அதன் பின்பு எரிபொருள் வழங்கப்படாததன் காரணமாக கடலுக்கு மீன் பிடிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது எரிபொருள் நெருக்கடி காரணமாக முல்லைத்தீவின் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் வாடும் மக்கள் கடல் உணவினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

கடற்றொழிலாளர்களுக்கும் எரிபொருளினை முதன்மையாக பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 280 | 240 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 230 | 240 | 250 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 500 | 600 |
| தக்காளி | 250 | 240 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 240 |
| கோவா | 250 | 340 | 300 | 350 |
| கரட் | 200 | 350 | 400 | 400 |
| பூசணி | 240 | 240 | 240 | 250 |
| புடோல் | 160 | 160 | 200 | 240 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 230 | 230 | 240 | 260 |
| பாகற்காய் | 300 | 200 | 400 | 500 |
| வெண்டக்காய் | 160 | 160 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 210 | 240 | 280 |
| பயற்றங்காய் | 250 | 300 | 300 | 400 |
| லீக்ஸ் | 200 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 280 | 300 | 300 | 350 |
| கறிமிளகாய் | 500 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 800 | 360 |
| போஞ்சி | 350 | 450 | 600 | 520 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | --- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 240 | 280 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | 360 |
| முள்ளங்கி | 120 | 100 | 200 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 150 | 80 | 160 |

# நெல்லினை சேமித்து வைக்க முடியாத நிலையில் விவசாயிகள்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்லினை சேமித்து வைக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர் என அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த இரண்டாண்டுகளாக யூரியா உரத்தினை பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போதைய சிறுபோகத்திற்குக் கூட நகைகளை அடைவு வைத்தே பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

யூரியா இல்லாத காரணத்தினால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அறுவடை செய்யப்படும் நெல் உடனடியாக விற்பனை செய்தால்தான் கடன்களை செலுத்த முடியும்.

உணவுப் பாதுகாப்பு என்ற பெயரில் வீட்டில் நெல்லினை வைத்துக் கொண்டு கடன்களை செலுத்த முடியாது. அரசு மருந்துகள், யூரியா போன்றவற்றினை எதிர்காலத்தில் குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கப் பெற்றால்தான் விவசாய முயற்சிகள் பயனுள்ளதாக அமையும்.

தற்போது கூட எரிபொருள் நெருக்கடியினால் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக அறுவடையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தனர். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவையால் 10 அம்ச கோரிக்கைகள் முன்வைப்பு

(குப்பிழான்)

அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்காக அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவை தமிழ் மக்கள் தொடர்பான பத்து அம்சக் கோரிக்கைகளை விடுத்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் குறித்த கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசினால் நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத்தாலும் ஒட்டுக்குழுக்களாலும் கடத்திக் காணாமலாக்கப்பட்ட எம் தமிழ் உறவுகள் மற்றும் இலங்கை இராணுவத்திடம் வலிந்து கையளிக்கப்பட்ட எமது போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் தற்பொழுது எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்று நீதியான முறையில் பொறுப்புக் கூறவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதியில் நிறுவப்பட்ட பௌத்த மத அடையாளங்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


தமிழர் தாயகத்தில் உள்ள எமது மக்களின் பூர்வீகக் காணிகளை இலங்கை அரசு கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துவதுடன் கையகப்படுத்திய காணிகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு தமிழர் பகுதியில் எமது இளைஞர், யுவதிகளுக்கு அதிகமான வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவகையில் பெரியளவிலான தொழிற்சாலைகளை விரைவில் நிறுவுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

நீண்ட காலமாக நடாத்தப்படாமல் இருக்கும் மாகாணசபை தேர்தலை உடனடியாக நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை இலங்கை அரசிடம் இருந்து எழுத்து மூலமான உத்தரவை அனைத்து தமிழ்க் கட்சிகளும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து இலங்கை அரசின் வாய்மூல உத்தரவுகளை நம்பி ஏமாறும் போக்கிற்கு அனைத்து தமிழ்க் கட்சியினரும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-18-33-60)



மாலை சந்தையான் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பெருந்திரளான பக்தர்களுடன் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

# யாழில் இனந்தெரியாத நபர்களால் வீடு புகுந்து பெற்றோல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை இருவர் களவாடியுள்ளனர்.

குறித்த வீட்டினுள் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த இருவர், வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காலையில் வீட்டார் எழுந்து மோட்டார் சைக்கிளை இயக்கிய போது மோட்டார் சைக்கிள் இயங்காத நிலையிலையே பெற்றோல் திருடப்பட்டமை தெரிய வந்துள்ளது.

பின்னர் வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கமராவில் பரிசோதித்த போது, வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் மோட்டார் சைக்கிளில் பெற்றோலை திருடிக்கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது. (4-33)



வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தொண்டர் சபையினர் மற்றும் கனடாவாழ் தொண்டர்கள் இணைந்து வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட நல்லூர் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் 5000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-சிவசாந்தன்)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

கோண்டாவில் குமரகோட்டம் சித்திவைரவர் அம்பாள் ஆலய ஸ்ரீ முத்துமாரி அம்மன் மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் பதினைந்து தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெற உள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் 1 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (4-6-18)

# சிறுப்பிட்டி ஞானரைவர் மணவாளக்கோலம்

(குப்பிழான்)

சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாக உள்ளது. கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மணவாளக் கோல சங்காபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்தும் 11 தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத்திருவிழாவும் 27 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 28 ஆம் திகதி வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று காலை சங்காபிஷேகமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

அன்றையதினம் மாலை திருவூஞ்சல் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து வைரவப் பெருமான் பூந்தண்டிகையில் வீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும். (4-6-18)

# இராசிபலன்

18.07.2022
ஆடி 02, திங்கட்கிழமை
பஞ்சமி பிற்பகல் 3.06 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 6.43 மணிவரை
சுபநேரம் 12.00-1.30 மணிவரை
இராகுகாலம் 7.30-9.00 மணிவரை

சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்

**வளவன்**




ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெரிதும் பாடுபடுவீர்கள், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.




தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், தூரத்து உறவினர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.




நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

வாழ்க்கை உன்னைச் சுமையாக நினைப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு நாடு மிக மோசமடையும்

## பதில் ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)


**உக்ரைன் போரினால் இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அரிசி உற்பத்தி 16 மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உர இறக்குமதி தடைக்கு முன் 24 தொன்னாக இருந்தது.

வரும் செப்டெம்பர் - ஒக்டோபர் மாதங்களில் தொடங்கும் பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் உரங்களுக்காக 600 மில்லியன் டொலர்கள் செலவிடப்படும்.

இலங்கையின் பொருளாதாரம் இவ்வருடம் 6 சதவீதத்தால் குறையும். இதனால் அடுத்த ஆண்டு பெருமளவிலான வேலைகள் இழக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். (4)



# ஜனாதிபதி தேர்தலில் ரணிலே வெற்றி

## ஐ.தே.க நம்பிக்கை

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் இடம்பெறும் வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 140 வாக்குகளைப் பெற்றுக் கொள்வார் என ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இதனை தெரிவித்தார்.

பொருளாதார மந்த நிலையில் உள்ள நாட்டிற்கு தேவையான கொள்கைகள் குறித்து ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள அரசியல் அனுபவத்திற்காக அவருக்கு பாராளுமன்றில் பெரும்பான்மை கிடைக்கும் என நம்புவதாக வஜிர அபேவர்தன தெரிவித்தார். (4)

# எரிபொருளில் 10 வீதம் உற்பத்தி, சேவை துறைகளுக்கு

## ஐ.ஓ.சி.தீர்மானம்

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தினால், விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவில், 10 வீதத்தை உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக, லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சுசந்த கோசல விதானராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் மாத்திரமே நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்கிறது.

எனவே, அதனை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு தங்களுக்கு உள்ளதால், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் சுசந்த கோசல விதானாராச்சி தெரிவித்துள்ளார். (4)

# பொருாதார தடைகள் ரஷ்யாவை பாதிக்காது

## பதில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ரஷ்யாவிற்கு எதிராக உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் மூன்றாம் தரப்பு நாடுகளை மண்டியிட வைத்துள்ளது என பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ஒருபோதும் ரஷ்யா மண்டியிடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யா உடனடியாக போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்காமல் பேச்சுக்கு உக்ரைன் தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த மோதல் காரணமாக முழு உலகையும் பிணைக் கைதிகளாக வைத்திருக்க முடியாது.

எனவே உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (4)

# இராணுவத்தினரையே அரசு நம்பியுள்ளது

## — எதிர்க்கட்சி குற்றச்சாட்டு —

(கொழும்பு)

பொதுமக்களை ஒடுக்கும் இராணுவ அதிகாரிகளையே அரசாங்கம் நம்பியுள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய இராணுவ அதிகாரி பணி இடைநீக்கப்பட்டமை தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசியபோதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்லக்ஷ்மன் கிரியெல்ல இந்த குற்றச்சாட்டை முன் வைத்தார்.

மக்களை அடக்கும் அதிகாரிகளே அரசாங்கத்திற்கு தேவை என்பதையே இந்த சம்பவம் சுட்டிக்காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# காலிமுகத்திடல் போராட்டம் நேற்றுடன் 100 நாட்கள் நிறைவு

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமான போராட்டம் நேற்றுடன் 100 நாட்களை நிறைவு செய்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி இளைஞர்கள் குழுவொன்று இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தது.

இதேவேளை, போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்தவர்களை நினைவு கூரும் வகையில் விசேட நிகழ்வும் நேற்று முன்தினம் இரவு போராட்டக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டதுடன், போராட்டத்தின் 100 ஆவது நாள் விழாவை கொண்டாடும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. (4)


சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. சிறீஜனனி சிவராசா

(விஞ்ஞான பாட ஆசிரியை)

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்



சேவை விபரம்

யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்
17.08.1988– 20.10.1988

யா/புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை
21.10.1988– 04.02.1991

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
05.02.1991–01.03.1993

யா/உரும்பிராய் சந்ரோதயா வித்தியாலயம்
02.03.1993 –01.01.1997

யா/அத்தியார் இந்துக் கல்லூரி
02.01.1997–15.06.2010

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
16.06.2010–05.01.2020

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
06.01.2020–17.07.2022 (இற்றை வரை)

அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது சக ஆசிரியரின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக இருக்க மனதார வாழ்த்துகின்றோம்.

(1273)

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்


## அம்புலிமாமா

## மணத்திற்கு மனம்

(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது மாயநாதன் "பூர்ணிமா! நான் என் மந்திர மாலையின் சக்தியால் உன்னை இங்கு கொண்டு வந்து விட்டேன். ஆனால் மந்திர மாலையின் உதவியால் நான் உன்னை மணக்க விரும்பவில்லை. அதனால்தான் அந்த மாலையை வாசலிலுள்ள புலியின் கழுத்தில் போட்டுவிட்டு வந்தேன். அந்த மாலை என் கழுத்தில் இல்லாவிட்டால் நான் ஒரு சாதாரண மனிதனே.

நீ சம்மதித்தால் உன்னை அக்கினி சாட்சியாக மணந்து கொள்கிறேன். உனக்கு விருப்பம் இல்லை என்றால் உன்னை உன் வீட்டில் கொண்டு போய் விடுகிறேன்" என்றான். இவ் வாறு மாயநாதன் கூறியதைக் கேட்ட



சுந்தரவர்மன் ஆச்சரியப்பட்டான். பூர்ணிமா அவனுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்க அவர்கள் இருந்த இடத்தின் பக்கம் சென்றான்.

பூர்ணிமா மாயநாதனைப் பார்த்துத் தலை குனிந்தவாறே நீங்கள் இந்த மாயமந்திர வேலைகளை விட்டுவிட்டு எல்லோருக்கும் மத்தியில் கௌரவமாக வாழத் தயாரானால் நான் உங்களை மணந்து கொள்கிறேன்" என்றாள்.

மாயநாதன் மகிழ்ந்து போய் பூர்ணிமாவின் கையைப் பற்றப் போகையில் சுந்தரவர்மன் அவர்களின் முன் போய் நின்றான். அவன் "பூர்ணிமா! இவன் மந்திரவாதி. கொடியவன். தன் மணி மாலையால் உன்னை மயக்கியவன். இவனை மணக்காதே. நான் இந் நாட்டு இளவரசன். என்னை மணந்து கொள்" என்றான்.

பூர்ணிமா இளவரசனின் கழுத்திலிருந்த மாலையைப் பார்த்தாள். மறு நிமிடமே ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவள் போல மெதுவாக நடந்து வந்து சுந்தரவர்மனின் பக்கத்தில் நின்றாள். இதைப் பார்த்த மாயநாதன் பலமாகச் சிரித்தான்.

சுந்தரவர்மன் அவனை எரித்து விடுபவன் போலப் பார்த்தான் நீ ஏன் இப்படிச் சிரிக்கிறாய்? ஒரு அபலையான பெண்ணை உன் மந்திரசக்தியால் வசீகரித்துக் கவர்ந்து வந்த கயவன் நீ.

உன்னைச் சட்டப்படி தூக்கில் போடலாம். ஆனால் உன்னை ஒன்றும் செய் யாமல் விட்டு விடுகி றேன். பிழைத்துப்போ என்றான். (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கோவலன் என் காவலன்




ஆனால் கரைபுரண்டு ஓடும் காவிரி பூம்புகாருக்கு அந்தக் கஷ்டத்தைத் தரவில்லை

நெல் மணிகளின் கனத்தில் தலை சாய்த்த பயிர்களைப் பார்க்கும் போது, வருகிறவர்களைப் பணிவாக வரவேற்பது போலக் காட்சியளித்தது. புறநகர் முழுவதும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற செழுமை.

மக்களிடம் செலவு செய்ய இருந்த ஏராளமான செல்வத்தை நம்பி வணிக வீதியில் முத்துகளும் மாணிக்கமும் வைரமும் தங்க நகைகளும் குவித்து வைக்கப்பட்டிருந்தன இது மட்டுமல்ல, கணிகையர்களின் ஆடை அலங்காரமும் ஆபரணங்களும் அவர்கள் வசித்த அடுக்கு மாளிகைகளும் கூட பூம்புகாரின் செல்வச் செழிப்பைக் காட்டின என்றே சொல்ல வேண்டும்.

ஆம்! தங்களிடம் வருகிற ஆண்களிடமிருந்து கணிகையர் சம்பாதித்ததே இவ்வளவு என்றால், மக்களின் செல்வம் எத்தகையதாக இருக்கும்! வசீகரமும் கிளர்ச்சியூட்டும் உடலமைப்பும் கொண்ட இளம் பெண்கள். பூம்புகார் இந்திர விழா நகரம் என்பதற்குக் கட்டியம் கூறினார்கள் இயற்கையிலேயே சந்தோஷமாக இருக்கிற பூம்புகார் மக்கள் அன்று மேலும் உற்சாகத்தில் இருந்தார்கள். மக்களின் அந்த உற்சாகம் கண்ணகியையும் தொற்றிக் கொண்டது. அவளும் மிகுந்த சந்தோஷம் கொண்டவளாகக் காணப்பட்டாள்.

அந்த மிகப் பெரிய மண்டபத்தில், அவளைச் சுற்றிலும் தோழிப் பெண்கள். நேர்த்தியான உடையும் நிமிர்ந்த மார்புகளுமான கன்னிப்பெண்கள் சடங்குகளில் ஈடுபட்டிருப்பதுபோல நடித்தார்கள். எதேச்சையாகப் பார்ப்பது போல அவ்வப்போது கூட்டத்தில் இளைஞர்களைத் தேடினார்கள். தங்களைப் பார்க்காத இளைஞர்களைப் பார்த்து ஏங்கினார்கள். பார்க்கிறவர்களை முறைத்தார்கள்.

அங்கே பார் அவன் என்னையே பார்க்கிறான் என்று பலர் தங்களுடைய தோழிகளிடம் கோபத்துடன் சொன்னார்கள். ஆனால் உள்ளூர அவர்களுக்கு சந்தோஷம் தான் அது எல்லோரும் அறிந்த ரகசியம்

திருமணமான இளம் பெண்கள் கண்ணகியைச் சுட்டிக் காட்டித் தாழ்ந்த குரலில் பேசி ஆர்ப்பாட்டமாகச் சிரித்தார்கள். சிலர் கண்ணகியின் காதருகே ஏதோ சொல்ல அவள் முகம் சிவந்து, உதட்டைக் கடித்து தலையைக் குனிந்து கொண்டாள்.

மண்டபத்தின் ஓரத்தில் வாலிபர்கள் கூட்டம். அவர்களின் பார்வை மேடையிலிருந்த இளம் பெண்கள் மேலேயே இருந்தது.

அதோ பார். அந்த நீலச் சேலைப் பெண் மூன்றாம் முறையாக என்னைப் பார்க்கிறாள்.

இவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கும் போது அப்படித்தான் தெரியும் அவள் பார்ப்பது நானாகக் கூட இருக்கலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்திலும் தொடருவான்!
– இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பெற்றோல் விநியோகத்தில் நடக்கும் சண்டித்தனக் கலாசாரம்

எரிபொருட்களை ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே எரிபொருளை வழங்குவதற்கு தேசிய ரீதியில் எரிபொருள் விநியோக நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாக எரிபொருள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க வடபகுதியில் எரிபொருள் விநியோக அட்டைகள் வழங்கப்பட்டு அந்த அட்டைகளின் அடிப்படையில் பெற்றோல், டீசல் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் எந்த நடைமுறை பின்பற்றப்படும் என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

இவை ஒருபுறமிருக்க, கடந்த நாட்களில் எரிபொருள் விநியோகத்தின்போது குழப்பங்கள் ஏற்படுவது சர்வசாதாரணமாக நடந்தாகிறது.

பொதுமக்கள் ஒழுங்காக வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது, திட்டமிட்டு இடையில் புகுந்து ஒழுங்கைக் குழப்புகின்ற அட்டகாசக் குழுக்களின் செயற்பாட்டை இதுவரை எவரும் கட்டுப்படுத்தவில்லை.

சிலவேளை இந்தக்குழுவுக்கும் பொலிஸாருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டோ என்றுகூடச் சந்தேகிக்கின்ற அளவில் நிலைமை உள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு எரிபொருள் நிலையங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தி, அந்தக் குழப்பத்தினூடு இடையில் புகுந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்கின்ற ஒரு சண்டித்தனக் கலாசாரம் வடபுலத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மிக பௌவியமாக நடந்தாகிறது.

இதனால் அப்பாவிப் பொதுமக்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக எரிபொருளுக்காக நீண்டநேரம் காத்துநின்ற கவலையோடு வெறுமையாக வீடு திரும்புகின்றனர்.

இங்கு குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் அதற்குப் பின்னணியில் இருப்பவர்கள் பற்றிய விபரங்கள் பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியுமாயினும் தேவையில்லாத பிரச்சினை எதற்கு என்ற கட்டத்தில் அவர்கள் மௌனமாக இருந்து விடுகின்றனர்.

ஆனாலும் எரிபொருள் நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்தும் குழுவினர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் இனிவரும் காலங்களிலும் எரிபொருள் விநியோகத்தைச் செம்மையாகச் செய்ய முடியாது என்பதுதான் உண்மை.

ஆகவே எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன என்ற செய்தியோடு, எரிபொருளை ஒழுங்கு சீராக வழங்குவதற்கும் பங்கீட்டு அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் எரிபொருள் கிடைப்பதற்கும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் மீண்டும் மீண்டும் எரிபொருள் நிலையங்களில் குழப்பங்கள் ஏற்படுவதும் அந்தக் குழப்பங்களை ஏற்படுத்தி அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதுமான நடவடிக்கைகள் தொடரவே செய்யும்.

## 100 ஆவது நாளை முன்னிட்டு வாழ்த்து தெரிவித்த தேசப்பிரிய

(கொழும்பு)

அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் நடைபெற்று வரும் கோட்டா கோ கம தன்னெழுச்சி ஆர்ப்பாட்டத்தின் 100ஆவது நாள் நேற்றாகும்.

இந்நிலையில் குறித்த போராட்டம் 100 ஆவது நாளை எட்டியதற்கு பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தனது முகநூலில் குறித்த தன்னெழுச்சி போராட்டத்திற்கு வெற்றி என பதிவிட்டுள்ளார். (4-7)

## அவசர நிலையை சமாளிக்க நாட்டில் இரத்தம் இல்லை
### இரத்த வங்கி பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையின் இரத்த வங்கி என அழைக்கப்படும் தேசிய இரத்த மாற்றுச் சேவையில், அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகளை உள்ளடக்கிய அவசர நிலைமையை சமாளிக்கும் வகையில் இரத்தம் இல்லை என இரத்த வங்கியின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஷ்மன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பொது மக்களிடம் மோதல்கள் போன்ற துரதிஷ்ட நிகழ்வைத் தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்முறை ஒன்று வெடித்து, இரத்தத்தின் தேவை திடீரென அதிகரிக்கும் பட்சத்தில், உள்நோயாளிகளுக்கான சிகிச்சையை மேற்கொள்வதற்கு மாத்திரமே இரத்தம் கையிருப்பிலுள்ளது. அத்தகைய சூழ்நிலைகளில் பொறுப்புடன் நடந்து கொள்வது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும்.

தலசீமியா, சிறுநீரகம், கல்லீரல் மற்றும் மண்ணீரல் நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தினமும் சுமார் 1100 யூனிட் ரத்தம் பயன்படுத்தப்படுகிறது.

எனவே பொறுப்பற்ற முறையில் செயற்படும் போது இந்த நாட்டு மக்களுக்கு பாரிய பேரிடராக மாறும் என தெரிவித்துள்ளார். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 19 ஆம் திகதி காலை 10.00 மணியிலிருந்து மாலை 11 மணி வரை யாழ் குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்படும்.

## உலக்கையால் அடித்து தாயைக் கொன்ற மகள்

(கொழும்பு)

தனது வயோதிபத் தாயின் தலையில் உலக்கையால் தாக்கி மகள் கொலை செய்த சம்பவம் ஒன்று நேற்று பதிவாகியுள்ளது.

பொரளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேஸ்லைன் மாவத்தை - சிங்கஹ புர தொடர்மாடி குடியிருப்பில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதான மகளே இவ்வாறு தனது 65 வயது தாயைத் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 38 வயது மகளை பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-7)

## போட் சிட்டி முதலீடுகளுக்கு சிறப்பு வங்கி கணக்கு அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் சீனாவினால் கட்டமைக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார வலயத்தில் முதலீட்டாளர்கள் வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கி கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு எனப்படும் சிறப்பு வங்கிக் கணக்கு வகையொன்றை அங்கீகரித்துள்ளது.

முதலீட்டாளர் கணக்கு தொடர்பில், இலங்கையில் உள்ள அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுக நகரத்தில், வெளிநாடுகளில் இருந்து வணிகங்களை நிறுவும் நிறுவனங்கள், இந்தக் கணக்குகளை பயன்படுத்த முடியும்.

அத்துடன் தமது முதலீடுகளை நிறுவனங்கள், வெளிநாட்டு நாணயங்களிலேயே வைத்திருக்க முடியும்.

இந்த நாணயங்கள் போட் சிட்டியில் வணிகம் தொடர்பான முதலீடுகளுக்கு இது பயன்படுத்தப்படவேண்டும். இந்நிலையில் துறைமுக நகருக்குள் தனித்தனியாக, வங்கிகள் அமைக்கப்படுவதற்கான அடித்தளங்கள் தயாராகி வருகின்றன. இதற்கு ஆறு உள்ளூர் வங்கிகள் இதுவரை விருப்பம் தெரிவித்துள்ளன.

இதன்படி, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அதன் அதிகார எல்லைக்குள் வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக இந்த வங்கிகளுக்கு உரிமம் வழங்கப்படும் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (4-7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# மனநிறைவு



இறைநிலை, பேரியக்க மண்டலம், உயிரினங்கள், இன்ப துன்ப விளைவுகள், எண்ணம்; செயல்கள், விருப்பம், நிறைவு என்ற எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்ந்து இணைந்த ஏற்பாடாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நமக்கென்ன குறை? என்னென்ன குறை? உண்மையில் குறையே இயற்கையில் எள்ளளவும் இல்லை.

பின் ஏன் மனக்குறை? உடல் நலக்குறை?

மனித உள்ளத்தில் தேவை உணர்வு, விருப்பம் என்று இரண்டு எண்ண எழுச்சிகள் உள்ளன. தேவை இயற்கையானது. உடலையும் உயிர் வளர்ச்சியையும் ஒட்டி எழுவது. விருப்பம் தேவையில் இருந்தும் எழலாம். கற்பனையாகவும் பழக்கத்தில் இருந்தும் எழலாம். தேவையை ஒட்டியதாகவே விருப்பத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால் நீயே ஞானி. கற்பனையாகவும் பழக்கத்தை ஒட்டியும் எழும் விருப்பங்களை அப்படியே செயற்படுத்த எண்ணத்தை, உடலை இயங்க விடும்போது உனக்கு அமைந்த ஞானத்தை பயன்படுத்தாத வீணனாகிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 10 . 1931 | 17 . 07 . 2022 |

## திருமதி வைத்தியலிங்கம் பூமணி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்தியலிங்கம் பூமணி நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகமுத்து ஆகியோரின் மகளும், கந்தர் ஆனந்திப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திய லிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தவ ரோதயன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), ஸ்ரீஇராஜவரோதயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலட்சுமி, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியும், சிவகுகன் - கஜாசனா, கஜாசனன்-ஹம்சா, நிதேஷன் - சுவர்ணா சனா, அருணன், அச்சுதன், அட்சயன் ஆகியோரின் பேர்த்தியும், அபிசரன், அபி நேகா, அர்ச்சிதன், ஹரிசிவகாமி ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நடராசா, தியாகராசா, சின்னம்மா, பவளரத்தினம் மற்றும் திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரப்பிள்ளை, அபிராமிப் பிள்ளை, சிற்றம்பலம், கனகசபை, ஆச்சியம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி: 0777 682 265
துரை வீதி, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20015) 1/6

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 05 . 1935 | 17 . 07 . 2022 |

## இராமலிங்கம் சுந்தரசிவபாக்கியம் அம்மா

யாழ்ப்பாணம் சுழிபுரம் வழக்கம்பரையை பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுந்தரசிவபாக்கியம் அம்மா அவர்கள் நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு ஐயா சின்னம்மா அம்மாள் ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், செல்லையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், இராமலிங்கத்தின் அன்புத் துணைவியாரும், திருச்செல்வம் (சவுதி), ரதி (ஆசிரியை, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சைனி, ஈஸ்வரன் (தபாலதிபர், பிராந்திய கணக்கீட்டு காரியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், ராஜா, ரவி, சதுர்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாத ஐயா, பாக்கியம்மாள், நீதிநாத குருக்கள் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஈஸ்வரன் (மருமகன்)
077 606 7037

(CS 20011) 1/6

# மரண அறிவித்தல்

## திரு. மயில்வாகனம் வினாசித்தம்பி



(முன்னாள் உரிமையாளர், குகன் ஸ்ரோஸ் – பளை)

இலங்கை அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மயில்வாகனம் வினாசித்தம்பி (முன்னாள் உரிமையாளர் குகன் ஸ்ராஸ் - பளை) அவர்கள் கடந்த (12.07.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளை (மாது) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், குசேலா (லண்டன்), குகதாஸ் (இந்தியா), பிரேமதாஸ் (லண்டன்), கோகில தாஸ் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், குணரத்தினம் (லண்டன்), லதா (இந்தியா), டயாதேவி (லண்டன்), காந்தரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளமாறன் + ஜனனீதா (லண்டன்), இந்துஜா + சுஜாகன் (லண்டன்), கஸ்தூரி + பிரகாஷன் (நெதர்லாண்ட்), மகிழ்ராஜ் (இந்தியா), பிரதுஜா (லண்டன்), பிரதோஸ் (லண்டன்), பிருத்திகா (லண்டன்), நிதுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாத்தாவும், அபிநயா (லண்டன்), அஞ்சலிக்கா (லண்டன்), ஆரியன் (நெதர்லாண்ட்), ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, குஞ்சுப்பிள்ளை, தம்பிராசா (துரை), தம்பித்துரை, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா, பூரணம், பாக்கியம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற பீற்றர்யெனாழ் மற்றும் தனலக்ஸ்மி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லக்ஸ்மி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு சம்மந்தியும், மனோகரசிங்கம் (கனடா), நிமலமோகன் (சுவிஸ்), பத்மராணி, நிமலராங்கன், நிமல ரூபன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், கமலாதேவி, சரோஜாதேவி, சரஸ்வதி, பொன்னுத்துரை, யோகலிங்கம் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாய் மாமனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, புஸ்பமலர், காலஞ்சென்ற நடராஜா, மலர் தம்பதிகளின் மைத்துனரும், சுரேஷ்குமார் குடும்பம் (கனடா), சிவகுமார் குடும்பம் (இலங்கை), நந்தகுமார் குடும்பம் (கனடா), உதயகுமார் குடும்பம் (கனடா), தயா குடும்பம் (இலங்கை), கண்ணன் குடும்பம் (இலங்கை), கேமா குடும்பம் (இலங்கை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் (20.07.2022) புதன்கிழமை புலோப் பளை பளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோப்பளை பொத்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

| | |
|---|---|
| குகதாஸ் (இந்தியா) | : 0091 98400 46208, 0091 98408 46206 |
| குணரத்தினம் (லண்டன்) | : 0044 781 755 4893 |
| பிரேமதாஸ் (லண்டன்) | : 0044 777 380 3807 |
| கோகிலதாஸ் (லண்டன்) | : 0044 787 514 9229 |
| இலங்கை | : 0094 766 094 532, 0094 776 462 081 |

(CR 36660) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணிலின் வீட்டுக்கு தீ வைப்பு:

# பிரதான சந்தேகநபர் டுபாய்க்கு தப்பியோட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி பிரமுகரின் மகன் என்கிறது சி.ஐ.டி.

கொழும்பு, ஜுலை 18
பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த, முன்னாள் பிரதி அமைச்சர் மகன் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு டுபாய் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
தப்பியோடிய சந்தேகநபரின் தந்தை, மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் பிரதியமைச்சர் எனவும், பின்னர் அவர் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதாகவும், தற்போது அவர் கொழும்புக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் தொகுதி அமைப்பாளராகக் கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# கண்ணீர்புகைக்குண்டுகளுடன் சந்தேகநபர் நேற்றுக் கைது

நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் முயற்சியின்போது இடம்பெற்ற மோதலில் பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களால் திருடப்பட்ட 50 கண்ணீர் புகை குண்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர் ஒபேசேகரபுரவில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்தின்போது, இராணுவத்தினர் இருவரை தாக்கி அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றியதாக முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



# நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 18
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவையை ஆரம்பித்துள்ளது.
பரீட்சார்த்த திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவையின் ஊடாக, முச்சக்கர வண்டிகள் மற்றும் மின்பிறப்பாக்கிகளுக்கான எரிபொருளை வழங்க எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
எரிபொருள் நிரப்ப நிலையங்களில் இருந்து வெகு தொலைவிலுள்ள திறந்த வெளி இடங்களில் இந்த நடமாடும் எரிபொருள் விநியோக திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)




வடக்கு - கிழக்கு

## ஊழல்வாதிகளுக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஜுலை 18
வடக்கு - கிழக்கு ஊழல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களை உடனடியாகக் கைதுசெய்யக் கோரியும் மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.
தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
'தமிழ்ச் சமூகத்தை மலினப்படுத்தி அடகு வைத்து ராஜபக்ச குடும்ப ஊழல்வாதிகளுக்குப் பின்னால் பிழைப்பு நடத்திய பலர் வடக்கு - கிழக்கில் உள்ளனர். எமது சமூகத்தை இழிவுபடுத்திய இந்த ஊழல்வாதிகள் அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்' என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இந்த ஊழல்வாதிகள் கொள்ளையடித்த சொத்துக்களையும் மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (அ-ஒ-22)

தமிழ்த் தேசியக் கட்சிகளின்

# இறுதி ஆவணம் உறுதியாகும் இன்று

ஜனாதிபதி வேட்பாளர்கள், அதன் பின்னர் அமையவுள்ள அரசாங்கம், போராட்ட அமைப்புக்கள் ஆகியோரிடம் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை முன்வைப்பதற்கான வரைவை இன்று இறுதி செய்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் நேற்றைய இணையவழி சந்திப்பில் பங்கேற்றனர்.
இதன்போது தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை ஆவணம் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்ட வரைவை இன்று இறுதி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### முட்டுக்கொடுக்க...

நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டுமென்ற கட்சியின் தீர்மானத்தில் எந்த மாற்றம் இல்லை. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.
அந்தக்கட்சியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்று ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.
'பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ரணிலை ஆதரிக்கும் பெரமுனவின் தீர்மானத்தை, அந்தக் கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் கேள்விக்கு உட்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-22)

### ரணிலுக்கு...

தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற அமர்வு முடிந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்தோம். அவர் கூறியுள்ள விடயங்களை எங்கள் மத்திய குழுவுக்கு சமர்ப்பிப்போம். மத்தியகுழு இறுதி முடிவெடுக்கும். நேற்றுக் காலையும் சஜித் பிரேமதாஸ என்னைத் தொடர்பு கொண்டார். மீண்டும் எமது ஆதரவைக் கேட்டிருந்தார்.
ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை நாம் சந்திக்கப் போவதில்லை. அவர் இன்று நடக்கும் மாற்றத்துக்கு நேர் எதிரான தரப்புடன் சேர்ந்து செயற்படுபவராக நாம் கருதுவதால், அவருடன் பேசியும் பலனில்லையென்ற முடிவுக்கு வந்துள்ளோம்.
தேசிய மக்கள் சக்தியினர் நேற்று மதியம் எம்மைச் சந்தித்தார்கள். எமது மக்களின் அபிலாஷைகளை ஏற்காத, அங்கீகரிக்காதவர்களை ஆதரிப்பது கடினமாக இருக்குமென அவர்களிடம் சொல்லியுள்ளோம்.
இதேவேளை- சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார இருவரும் ஒற்றை யாட்சி அரசமைப்பை நீக்கி சமஷ்டி அரசமைப்பை கொண்டு வருவதற்கான எந்தவொரு இணக்கத்தையும் வெளியிடவில்லை.
யாரை ஆதரிப்பது, அல்லது யாரையும் ஆதரிக்காமலிருப்பதா என்பதை எமது மத்தியகுழு கூடி முடிவெடுக்கும். இரண்டு வருடங்களின் முன்னர் அமைந்த, மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்திலேயே இந்த நாடகங்கள் அரங்கேறவுள்ளன. இதனால் உண்மையிலேயே மக்களின் தாகம் தீரப்போவதில்லை - என்றார். (அ-ஒ-இ)

### யாரை ஆதரிப்பது?...

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இன்று மாலை அவரது வீட்டில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இதன்போது கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்ற நிலைப்பாடு வெளியாகலாம் என அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி-20 மாநாட்டில் ரஷ்யா வேண்டாம்

## கனடா எதிர்ப்பு

ஒட்டாவா, ஜூலை 18
ஜி-20 மாநாட்டில் ரஷ்யா பங்கேற்பதானது, தீயணைப்பு வீரர்களின் கூட்டத்துக்கு தீ வைப்பவர்களை அழைப்பதற்கு ஒப்பானது என்று கனடா தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியாவின் பாலி தீவில் ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர் களின் கூட்டம் இடம்பெற்றது. இதில் ரஷ்யப் பிரதிநிதியும் கலந்துகொண்டார். இதற்கு கனடா கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

ஜி-20 நாடுகளின் நிதி மந்திரிகளின் கூட்டத்தில் ரஷ்யாவின் பங்கேற்பு அபத்தமானது.

உக்ரைனின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு மற்றும் அதன் பொருளாதார விளைவுகளுக்கு ரஷ்யா நேரடியாகவும் மறைமுகமாகவும் முழுப் பொறுப்பாகவுள்ளது - என்றார். (ம)

### எம்.பிக்களுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ், அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும், திரும்பிச் செல்வதற்கும் சுதந்திரம் காணப்படுவதாகவும், நாடாளுமன்றத்துக்குள்ளும் சுதந்திரமாக செயற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக செயற்படுவதானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன் அச்சுறுத்தலாகவும் அமையும் என்று பதில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறையைப் பரப்பும் கலகக்காரர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாக குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று பதிவிட்டு, அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்கு முன்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு தீ வைத்து அவற்றை அழித்துள்ளதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். இவற்றை சுட்டிக்காட்டி கலகக்காரர்களால் மறைமுகமாக கொலைமிரட்டல் விடுக்கப்படுவதாகவும் பதில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதால் தமக்கு நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் காணப்படுவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கமைய இவை தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும்போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் பிறிதொருவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால், நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாவது அமைச்சரவை கூட்டத்திலும் தெரிவித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### மூன்று...

முதல் நுகர்வோருக்கு தொடர்ந்து வழங்குவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

லங்கா ஐ.ஓ.சி.யும் அதே விலை மாற்றத்தை நேற்றிரவு முதல் நடைமுறைப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

பெற்றோல் 92 ஒக்ரேன் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 450 ரூபாவாகவும், பெற்றோல் 95 ஒக்ரேன் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 540 ரூபாவாகவும்,

ஓட்டோ டீசல் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 440 ரூபாவாகவும், சுப்பர் டீசல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 510 ரூபாவாகவும் இனிமேல் விற்பனை செய்யப்படும்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் பெற்றோல் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### இந்தியா...

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பிரதாயபூர்வமான அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு இந்தியா தலையிடவேண்டும் என தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இரு கட்சிகள் இலங்கை நிலைவரம் குறித்து குறிப்பாக தமிழர் நிலைமை குறித்து கரிசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### சிங்கப்பூரிலும்...

தங்கியிருப்பதால் பாதுகாப்புச் சிக்கல்கள் ஏற்படலாம். எனவே, அவர் 15 நாள்களுக்குள் சிங்கப்பூரை விட்டு வெளியேறவேண்டும் - இவ்வாறு சிங்கப்பூர் அரசு, கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகக் கடந்த 13ஆம் திகதி அதிகாலை மாலைதீவுக்குத் தப்பிச் சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ச, பின்னர் அங்கிருந்து மறுநாள் 14ஆம் திகதி மாலை சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவர் தனது நண்பர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கோத்தபாய ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்த சிங்கப்பூர் அமைச்சர் காசி விஸ்வநாதன் சண்முகம், சிங்கப்பூர் அரசால் இனிப் பாதுகாப்பு அளிக்கமுடியாது எனவும், நாட்டை விட்டு 15 நாள்களுக்குள் வெளியேறும்படி கோரிக்கை விடுத்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை - சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்கு வருவதற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச விடுத்த கோரிக்கையை ஏற்க இந்திய அரசு மறுத்துவிட்டது என 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ-22)

### வீடு புகுந்து...

இது தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்துக்கு முன்புறமாகவுள்ள வீட்டில், பெண்ணொருவர் குழந்தைகளுடன் தனித்து வசித்து வருகின்றார். அவரது கணவன் வெளிநாடு சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வீட்டின் கூரையை உடைத்துக்கொண்டு முகமூடி அணிந்த ஒருவர் உள்நுழைந்துள்ளார். அவர் வீட்டின் கதவை திறந்து விட்டதும், வெளியிலிருந்து மேலும் 4 முகமூடி அணிந்த கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். அவர்கள் வீட்டாரை கத்தி முனையில் அச்சுறுத்தி 20 பவுண் நகையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர்களின் விவரங்களும் முறைப்பாட்டின் போது கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக 4 பேரை பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். அவர்களில் 20 மற்றும் 21 வயதுகளைச் சேர்ந்தவர்கள். மேலும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று அவர்கள் தொடர்பான விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ-ஒ-125)

### வணிக...

எரிபொருள் பாஸ் நடைமுறையானது சில தினங்களில் மேம்படுத்தப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். தரவுகள் சரிபார்க்கப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு வாகனத்துக்கும் 'க்யூஆர்' குறியீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ஒ-இ)

### 'கோத்தா கோ கம'...

திடலில் ஆரம்பிக்கப்பட்ட 'கோத்தா கோ கம'வுக்கு நேற்றுடன் வயது நூறு நாள். இதனை முன்னிட்டு, இந்தப் போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி மீரிஹானவில் உள்ள கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் கிளர்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 9ஆம் திகதி காலிமுகத்தில் போராட்டத்துக்கான அழைப்பு சமூக வலைத்தளங்கள் ஊடாக விடுக்கப்பட்டது. அன்றைய தினம் பல ஆயிரக்கணக்கானோர் காலிமுகத்திடலில் ஒன்றுகூடினர்.

அவர்கள், கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியாக காலிமுகத்திடலில் தங்கியிருந்து போராட ஆரம்பித்தனர். அதன் பின்னர் காலிமுகத்திடலில் கோத்தா கோ கம கிராமம் முளைத்தது. இந்த மக்கள் புரட்சியே மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியிலிருந்து அகற்றியது. அதன் தொடர்ச்சியாகவே கடந்த ஜூலை 9ஆம் திகதி கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மக்களின் புரட்சியால் ஜனாதிபதி பதவியிலிருந்து கோத்தாபயவும் தப்பியோட நேர்ந்தது. (அ-ஒ-5)

### நிறுத்தப்பட்டுள்ள...

விநியோகம் தொடங்கும் வரை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின்(சிபெட்கோ) எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாமென்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும். இணையவழி ஊடாக பதியப்பட்ட தேசிய எரிபொருள் பாஸ் மற்றும் வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் இரண்டும் கட்டாயமாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் திகதி அறிவிக்கப்படும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

**Visit, Study & Work**
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
* Visitor / Tourist Visa – All countries
* Minor Education – under age 17
* Skilled Migration – Express entry (PR)
* Study & Work – Canada (IELTS தேவையில்லை)
* Student Visa
  - Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 Overall)
  - France, Germany & Latvia (IELTS தேவையில்லை)

Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelveli, Jaffna. Tel: 0770385584
naltcjaffna@gmail.com

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல FAMILY DINING RESTAURANT க்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.
1. Chef 2. Cook 3. Kitchen Helper 4. Waiter
தங்குமிட வசதி உண்டு.
074 295 8663

**காணி விற்பனைக்கு**
யாழ் நாவற்குழியில் 90 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் (500000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493, 076 490 6029



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.